1972 மார்ச் 28]

மாண்புமிகு திரு. என். வி. நடராசன் : முதலாளிகள் மீறினால் அப்பொழுது என்ன நடவடிக்கை எடுக்கலாம் என்பதைப்பற்றி அரசு கவனிக்கும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : 739, 740 ஆகிய எண்கள் உள்ள இரு வினாக்களும் ஒன்றாக எடுத்துக்கொள்ளப்படும்.

Youth Corps.

* 739 *Q.*—THIRU K. T. K. THANGAMANI :
THIRU N. KITTAPPA :
THIRU K. KALIMUTHU : } Will the Hon. the Chief Minister be pleased to state—

(*a*) whether the Youth Corps proposed by the Government has been formed; and

(*b*) if so, the number of educated youths appointed as on this date district-wise?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : (அ) ஆம்.

(இ)	நியமன உத்தரவு அனுப்பப்பட்டவர்கள்.	பயிற்சியில் சேர்ந்தவர்கள்.
ஆண் தொண்டர்கள்	1,800	1,643
பெண் தொண்டர்கள்	200	193
மொத்தம்	2,000	1,836

மாவட்டவாரி ஒதுக்கீடு

மாவட்டங்கள்.	ஆண்.	பெண்.
சென்னை	156	30
செங்கற்பட்டு	95	10
தென்னாற்காடு	95	10
வட ஆர்க்காடு	95	10
மதுரை	190	20
திருச்சிராப்பள்ளி	190	20

வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY

மாவட்டங்கள்—தொடர்ச்சி	ஆண்	பெண்
கோயம்புத்தூர்	135	20
சேலம்	140	15
திருநெல்வேலி	98	10
கன்னியாகுமரி	104	10
நீலகிரி	71	8
தஞ்சாவூர்	190	20
தர்மபுரி	83	7
இராமநாதபுரம்	108	10
மொத்தம்		

***740** வின—**திரு. பி. எஸ். மணியன் :** மாண்புமிகு முதல் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினவுக்கு விடையளிப்பாரா—

இளைஞர் அணியில் தற்போது பயிற்சி பெற்று வரும் ஆண்கள் எத்தனை பேர் ? பெண்கள் எத்தனை பேர் ?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : நியமன உத்தரவு அனுப்பப்பட்ட 1,800 இளைஞர் அணி ஆண் தொண்டர்களில் கிராம விஸ்தரிப்பு நிலையங்களில் 1,643 ஆண் தொண்டர்கள் பயிற்சியினை முடித்து தேர்ந்தெடுக்கப்பட்ட வட்டாரங்களுக்கு ஆக்கபூர்வமான சமூகத் தொண்டாற்ற அனுப்பப்பட்டுள்ளனர்.

நியமன உத்தரவு அனுப்பப்பட்ட 200 இளைஞர் அணி பெண் தொண்டர்களில் 193 தொண்டர்கள், சென்னை சமூக பள்ளியில் சேர்ந்து பயிற்சி முடித்து, அரசு மற்றும் தனியார் துறை நிலையங்களுக்கு சமூகத் தொண்டாற்ற அனுப்பப்பட்டுள்ளனர்.

திரு. கே. டி. கே. தங்கமணி : இந்தப் பெண் தொண்டர்கள் எல்லாருமே சென்னையில்தான் பயிற்சி பெற்றார்கள் என்று அறிகிறேன். அவர்களை அந்தந்த மாவட்டத்தில் அவர்களுக்குச் சௌகரியமான இடத்திலேயே மாற்றி, பணி கொடுப்பதற்கு அரசு ஆவன செய்யுமா ?